ஆனந்த விகடன்
2·2·69 ANANDA VIKATAN 40 காசு






# கல்லூரி மாணவர்கள் பத்திரிகை நடத்துகிறார்கள்!

நான்கு, ஐந்து இளைஞர்கள் சென்னை பிராட்வேயில் உள்ள ஒரு கடையில் நுழைகிறார்கள்.

''சார்! நாங்க ஒரு மாதப் பத்திரிகை நடத்துகிறோம்; உங்க கடையைப் பற்றி ஒரு விளம்பரம் கொடுங்க சார்'' என்று கடை முதலாளியைப் பார்த்துக் கேட்கிறார்கள்.

முதலாளி உதட்டைப் பிதுக்கி விடுகிறார். அடுத்த கடையில் நுழைகிறார்கள். ''ஆகட்டும்-பார்க்கலாம்'' என்று பதில் வருகிறது. இப்படி நான்கைந்து கடைகள். எதிலும் உற்சாகமான பதில் கிடைக்கவில்லை. இளைஞர்களுக்குச் சோர்வு ஏற்படுகிறது.

''என்ன பிரதர், ஒரு விளம்பரமும் கிடைக்கலியே! இந்த மாத இதழைக் கொண்டு வர முடியாது போலிருக்கே'' என்கிறார் ஒருவர். மற்றவர்கள் கவலையும் அதுதான். அப்போதைக்கு அவர்கள் பிரிந்து விடுகிறார்கள். மறு நாள் மாலையில், கையகல இடத்தில் இருக்கக் கூடிய பத்திரிகை அலுவலகத்தில் சந்திக்கிறார்கள்.

இரண்டு மூன்று கம்பெனிகளிலிருந்து விளம்பரத்துக்கு 'ஆர்டர்' வந்திருக்கிறது. இளைஞர்களுக்குக் கொள்ளை மகிழ்ச்சி. 'எடிட்' செய்து தயாராக வைத்திருக்கும் கதை, கட்டுரை, கவிதைகளை எடுத்துக் கொண்டு அச்சகத்துக்குப் போகிறார்கள்.

'விறுவிறு' என்று வேலை நடக்கிறது. அடுத்த ஒரு வாரத்தில் இதழ் தயாராகி விடுகிறது. அவர்களே உட்கார்ந்து, சந்தாதாரர்களுக்கும், ஏஜெண்டுகளுக்கும் இதழை அனுப்பி விட்டு, ஒரு நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள்.

ஒரு பெரிய காரியத்தைச் சாதித்து விட்ட மன நிறைவு!

ஆம்! அவர்களைப் பொறுத்த மட்டில் அது பெரிய காரியம்தான். ஏனெனில், பத்திரிகை நடத்துவது அவர்கள் தொழில் அல்ல. அவர்கள் மாணவர்கள். கல்லூரியில் படிப்பவர்கள். தங்களது ஓய்வு நேரத்தை, மாணவச் சமுதாயத்துக்குப் பயன்படும் வகையிலும், பிற மாணவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தை நல்ல முறையில் செலவழிக்க வகை செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலும் அவர்கள் பத்திரிகை நடத்துகிறார்கள். மாதத்துக்கு ஓர் இதழ். பெயர் 'பூச்செண்டு.'

பொருத்தமான பெயர்தான். பல மலர்கள் சேர்ந்ததுதான் ஒரு பூச்செண்டு. அது போல் சில மாணவர்களின் தன்னலமற்ற உழைப்பால் உருவாகி வெளி வருவதுதான் இந்தப் 'பூச்செண்டு!'

''இவ்வளவு கஷ்டப்பட்டு, விளம்பரத்துக்காக அலைந்து, நீங்கள் இந்தப் பத்திரிகையை நடத்தத்தான் வேண்டுமா?'' என்று கேட்டேன்.

''என்ன சார் இப்படிக் கேட்டுட்டீங்க...? உருப்படியா ஒரு காரியம்



ஜெயவேலன்-வெங்கடரமணி-செயினுல்லாபுதீன்-வில்லியம் பெர்ஞண்டஸ்-சுந்தர்

செய்யணும்னு இறங்கிட்டோம். அதைப் பாதியிலே விட்டுட முடியுமா? அதனாலேதான் படிக்கிற நேரம் போக மீதி நேரமெல்லாம் இதே கவனமா இருக்கோம். அமெரிக்காவிலே ஹார்வர்டு யுனிவர்சிடியிலே படிக்கிற மாணவர்கள், தினசரிப் பத்திரிகையே வெளியிடுறாங்களாம். நாங்க ஒரு மாதப் பத்திரிகை கூடவா வெளியிட முடியாது?...''

''இதனாலே உங்களுடைய படிப்பு பாதிக்கப்படுமே?''

''இல்லீங்க....படிப்பிலே ஓரளவு சுமாராக இருக்கக் கூடியவங்க நாங்க. அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லே....''

''உங்களுடைய பெற்றோர்களுக்கு இதைப்பற்றித் தெரியுமா ?''

''தெரியும். அவங்களுக்கெல்லாம் சந்தோஷம், 'பசங்க' ஏதோ ஒரு பிரயோஜனமான காரியத்தைப் பண்றுங்களேன்னு....''

இப்படியொரு பத்திரிகை நடத்த வேண்டும் என்ற எண்ணம் இவர்களுக்கு எப்படி வந்தது?

சுந்தர், வில்லியம் பெர்ஞண்டஸ் என்ற இரண்டு மாணவர்களுக்கு நுண்கலைகளில் கொஞ்சம் நாட்டம். மாணவ சமுதாயத்தின் மனோ நிலைகளை விளக்கும் நாடகங்கள் நடத்த வேண்டும் என்ற ஆசை. ஆனால், அதற்குப் போதிய வசதி-வாய்ப்புகள்



பத்மினி


இல்லை. முடிவில் ஒரு பத்திரிகை நடத்தலாம் என்று விரும்பினார்கள். அந்தப் பத்திரிகை, மாணவர்களுக்காக—மாணவர்களால் நடத்தப்படுவதாக இருக்க வேண்டும் என்று திட்டமிட்டார்கள்.

இவர்களுடைய திட்டத்துக்கு ஆதரவு கொடுத்து வழி காட்டினார்



சென்னை எஸ். ஐ. வி. இ. டி. கல்லூரி முதல்வர் திரு. ராசேந்திரன். தம் வீட்டின் ஒரு சிறு பகுதியைப் பத்திரிகை அலுவலகத்துக்காக ஒழித்துக் கொடுத்தார். வேலை தொடங்கியது. நாளடைவில் வேறு சில மாணவர்களும் இவர்களுடன் வந்து சேரவே, 'ஆசிரியர் குழு' என்று ஒன்றை அமைத்துக் கொண்டு, மாதத்துக்கு ஓர் இதழ் வீதம் இது வரை பத்து இதழ்களைக் கொண்டு வந்து விட்டார்கள்.

ஒரு மாணவர் படம் போடுவார். ஒரு மாணவர் அட்டைப் படத்துக்கென்று புகைப் படங்கள் பிடித்துக் கொண்டு வருவார். இன்னொருவர் கதைகளையும், மற்றொருவர் கவிதை, கட்டுரைகளையும் 'எடிட்' செய்வார். 'மகளிர் பகுதி' என்றும் தனி அம்சம் உண்டு. சென்னை ராணிமேரி கல்லூரியைச் சேர்ந்த இரண்டு மாணவிகள் இதைக் கவனித்துக் கொள்கிறார்கள்.



இ. எஸ். மெர்வின்

வெவ்வேறு கல்லூரியில் படிப்பவர்கள், வெவ்வேறு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், வெவ்வேறு மதத்தினர் ஒன்று பட்டு உழைப்பது இந்தப் பத்திரிகையின் தனிச் சிறப்பு.

''எங்களிலே யாருக்கும் எந்தக் கட்சியிடத்திலும் ஈடுபாடு கிடையாது. மாணவர் சமுதாயமும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்பது எங்கள் ஆசை. அவர்கள் தங்களது அரசியல் சார்பற்ற கருத்துக்களை—சிந்தனைகளை வெளியிடுவதற்கு ஒரு கருவியாக இந்தப் பத்திரிகை பயன் பட வேண்டும்.''

''மாணவர்கள் அடிக்கடி நடத்தும் போராட்டங்களைப்பற்றி நீங்கள் எழுதுவதுண்டா?''

''எழுதியிருக்கிறோமே....பரீட்சை எல்லாம் ஒழுங்காக எழுதி முடித்து விட்டு, விடுமுறையின் பொழுது தங்களது நியாயமான கோரிக்கைகளுக்காக அமைதியான முறையில் போராட வேண்டும் என்பது தான் எங்கள் பத்திரிகையின் கொள்கை. நிறைய மாணவர்கள் இதை வரவேற்றிருக்கிறார்கள்.''

மாதத்துக்கு ஐயாயிரம் பிரதிகள் வெளியிடுகிறார்களாம். ஆயிரத்தைந் நூறு சந்தாதாரர்கள் இருக்கிறார்களாம். மாணவர்கள் மட்டுமல்ல—மற்றவர்களும் கூட. மலேசியா, சிலோன் ஆகிய நாடுகளுக்கும் போகிறது. ஆண்டுச் சந்தா, நான்கே நான்கு ரூபாய்தான்.

விடுமுறையின் பொழுது ஊருக்குச் சென்றால், சுற்று வட்டாரங்களில் உள்ள சுவையான செய்திகளைச் சேகரித்துக் கொண்டு, முக்கியமான பெரிய மனிதர்களைப் பேட்டி கண்டு, சென்னைக்குத் திரும்பி விடுகிறார்கள் ஆசிரியர் குழுவினர். மொத்தத்தில், ஒரு பெரிய பத்திரிகையில் வரக் கூடிய எல்லா அம்சங்களும் இதில் இடம் பெற்று விடுகின்றன. இவ்வளவுக்கும் உழைப்பு—அயராத உழைப்புத்தான் மூலதனம்.

'கேள்வி-பதில்' அம்சம் ஒன்று இருக்கிறது. புது விதம். ஒரே கேள்விக்கு மூன்று பேர் மூன்று விதமான பதில்களைத் தருகிறார்கள். உதாரணத்துக்கு ஒன்று:

கேள்வி:-நடிகை வாணிஸ்ரீயின் வயது என்ன?

பதில்:-✶ கல்லூரி மாணவராகிய நீங்கள் ஒரு நடிகையைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை.

✶ பூச்செண்டில் சினிமாவுக்கு அதிக முக்கியத்துவம் கிடையாது.

✶ கடமையில் கண்ணாக இருக்க வேண்டிய நேரத்தில், நடிகையின் நாட்டத்தில் மடமையாக இருக்கின்றீரே!

ஆம்! மாணவர்களை நோக்கி, 'கடமை! கடமை! அதற்குப் பிறகு தான் உரிமை-உல்லாசம்' என்று அறை கூவுகிறது பூச்செண்டு.

''இந்தப் பத்திரிகைக்கென்று சொந்தமாக ஒரு பிரஸ் வைக்க வேண்டும் என்பதுதான் எங்கள் லட்சியக் கனவு. தமிழ் மக்களின் ஆதரவு இருந்தால், அது நிறைவேறும்'' என்றனர் ஆசிரியர் குழுவினர்.

— முருகு.

புகைப் படங்கள்: ஏ. சாதரம்.